# உலக பொதுமக்கள் ஒன்றிணைந்த சமூக சேவை சங்கம்

## GLOBAL WELFARE AND SOCIAL SERVICE ASSOCIATION

Society Registration Act, 1860-ன் படி
பதிவு செய்யப்பட்ட சமூக சேவை சங்கம்.

## வருடாந்திர நிகழ்வு அறிக்கை புத்தகம்
(Social Service Yearly Program Report)

# 2025-2026

மக்களுக்கு சேவை செய்வதே
மனித நேயத்தின் அடையாளம்



# உலக பொதுமக்கள் ஒன்றிணைந்த சமூக சேவை சங்கம்

# GLOBAL WELFARE AND SOCIAL SERVICE ASSOCIATION

**Society Registration Act, 1860-ன் படி**
**பதிவு செய்யப்பட்ட சமூக சேவை சங்கம்.**

## உலக பொதுமக்கள் ஒன்றிணைந்த சமூக சேவை சங்கத்தின் மூலம் சிறந்த உலகத்தை உருவாக்குதல் :

இன்றைய உலகம் பல சவால்களை எதிர்கொள்கிறது – பகை விரோதம், சமத்துவமின்மை, வன்முறை மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனைகள்,

மக்கள் அமைதி, ஒற்றுமை, மற்றும் நம்பிக்கையைத் தேடுகிறார்கள். இதனால், இந்த சங்கத்தின் மூலம், வாழ்க்கையில் கடுமையாக போராடும் மனிதர்களுக்கு சேவை செய்யவும் மற்றும் நேர்மறை மாற்றங்களை கொண்டு வரவும் இந்த சங்கம் உருவாக்கப்பட்டது. எங்களின் நோக்கம். அனைத்து சமூகத்தினரும். மதம், சாதி அல்லது தேசியம் போன்ற வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைக்கும் அமைப்பை உருவாக்குவதாகும். நாங்கள் சமூக சேவைகள் வழங்க, கல்வியை மேம்படுத்த, ஆதரவற்றவர்களை ஆதரிக்க, அமைதி மற்றும் ஒற்றுமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த பணியாற்றுகிறோம்.

இந்த சங்கம் தேவையுள்ளவர்களுக்கு உதவுவதற்காக மட்டும் அல்ல, ஒவ்வொருவரும் கருணை, அன்பு மற்றும் பரஸ்பர மதிப்புடன் வாழ ஊக்குவிக்கவும். மோதல்களை குறைத்து, ஒவ்வொருவரும் பாதுகாப்பாகவும், அமைதியாகவும் வாழ கூடிய சமுதாயத்தை உருவாக்கவும் அயராது உழைக்கயிருக்கிறது. சிறிய செயல்களும் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிகையுடன் அனைவரும் இணைந்து பணியாற்றுவதன் மூலம் மனித உறவுகளின் மையமாக அன்பு, பரிவு மற்றும் அமைதி இருக்கும் உலகத்தை நாம் உருவாக்கலாம்.

இனம், மதம், மொழி, சாதி பாராமல் உலக மக்களை ஒரே குடும்பமாக இணைத்து, சமத்துவம் மற்றும் மனிதநேயம் நிறைந்த உலகத்தை உருவாக்குவதே நம்நோக்கம்.

## Vision

- மனிதநேயம் மற்றும் சகோதரத்துவம் வளர்த்தல்
- கல்வி, சுகாதாரம், அடிப்படை உரிமைகள் அனைவருக்கும் கிடைக்கச் செய்தல்
- ஏழை, முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கு ஆதரவு
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு
- சமூக ஒற்றுமை மற்றும் அமைதி வளர்த்தல்

## (இலக்கு) Mission

சமூகத்தில் பின்தங்கிய மக்களுக்கு நேரடி உதவி, விழிப்புணர்வு, திறன் மேம்பாடு மற்றும் பொருளாதார ஆதரவு மூலம் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல்.

- இலவச மருத்துவ முகாம்கள் நடத்துதல்
- கல்வி உதவித்தொகை மற்றும் புத்தக உதவி
- முதியோர் இல்லம், அனாதை இல்லங்களுக்கு ஆதரவு
- வேலைவாய்ப்பு பயிற்சி
- பெண்கள் சுய உதவி குழுக்கள் உருவாக்குதல்
- பேரிடர் கால உதவி (மழை, வெள்ளம், தீ விபத்து போன்றவை)

## குறுகிய கால இலக்குகள் (1–2 வருடம்) Goals

- 1000 குடும்பங்களுக்கு நேரடி உதவி
- வருடத்திற்கு 4 மருத்துவ முகாம்கள்
- 200 மாணவர்களுக்கு கல்வி உதவி
- 50 பெண்களுக்கு சுயதொழில் பயிற்சி



- நீண்ட கால இலக்குகள் (5–10 வருடம்)
- சங்கத்தின் மூலம் நிதியுடன் முதியோர் பாதுகாப்பு மையம் தொடங்குதல்
- இலவச கல்வி மையம் அமைத்தல்
- ஒவ்வொரு மாவட்டத்திலும் சங்க கிளைகள் தொடங்குதல்
- உலகளாவிய சமூக சேவை நெட்வொர்க் உருவாக்குதல்
- சங்கத்தின் அடிப்படை மதிப்புகள் (Core Values)
- மனிதநேயம்
- நேர்மை
- ஒற்றுமை
- சமத்துவம்
- பொறுப்புணர்வு



முகப்புரை

முன்னுரை

எங்கள் நோக்கம்

கடந்த வருட சேவைகள் (2025 – 2026)

சமூக சேவை படங்கள்

இந்த வருட சேவைகள் (2026 – 2027)

நன்றி உரை

India : +91 8072079621
UAE : +971 507426340
Kuwait : +96597796364
Mail : globalwelfaresocialserviceasso@gmail.com







**உலக பொதுமக்கள் ஒன்றிணைந்த சமூக சேவை சங்கம் தொடங்கிய வருடம் : 2021**













## சமூக சேவகர் :

என் உயிர் சொந்தங்களுக்கும் உறவுகளுக்கும் என் அன்பான வணக்கம்.

உலக பொதுமக்கள் ஒன்றிணைந்த சமூக சேவை சங்கம் எதற்காக தோன்றியது? மக்களாகிய நாம் 'இந்த உலகத்தை காப்பாற்ற வேண்டும்' என்று பேசுகிறோம். ஆனால் உண்மையில் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? உலகத்தையும், நம் சொந்தங்களையும், நாமே குறுகிய சிந்தனைகளுக்குள் பூட்டி வைத்திருக்கிறோம். நம் நாட்டில் மக்களாட்சி என்று சொல்லப்படுகிறது. ஆனால் அதற்குண்டான உண்மையான அர்த்தம் இன்று இங்கே இருக்கிறதா?



**சுப்ரமணியன்,** B.Tech.,
Mechanical Engineering

இங்கு மக்களாட்சி இல்லை இங்கு நடப்பது மன்னராட்சிதான். எந்த ஜாதி அதிகமாக வாக்குகளை வைத்திருக்கிறதோ, அந்த ஜாதியை மையமாக வைத்துக்கொண்ட கட்சிதான் ஆட்சியை நடத்துகிறது. அடுத்த தேர்தலில் இன்னொரு கட்சி வெற்றி பெறுகிறது. ஆனால் அந்தக் கட்சியும் அதே பெரும்பான்மை ஜாதியைச் சார்ந்த கட்சியாகவே இருக்கிறது. இந்தக் கட்சி அந்தக் கட்சியை குறை கூறுகிறது. அந்தக் கட்சி இந்தக் கட்சியை குறை கூறுகிறது. இதைத்தவிர வேறு எதுவும் நடப்பதில்லை மக்களே... நீங்கள் பணம் வாங்கி வாக்களிக்கிறீர்கள். ஜாதிக்காக வாக்களிக்கிறீர்கள். ஆனால் அதற்குப் பதிலாக உங்கள் வாழ்க்கையில் கிடைக்க வேண்டிய உண்மையான சந்தோஷத்தை நீங்கள் இழந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை உணருகிறீர்களா? தோல்வியடைந்தவர் தன் சொத்துகளை பாதுகாத்துக் கொள்கிறார். வெற்றி பெற்றவர் மீண்டும் அதிகாரத்தில் இருந்து சம்பாதிக்கிறார். வெற்றி பெற்ற கட்சி, 'நாங்கள் மீட்டெடுக்கிறோம்' என்று சொல்லி தோல்வியுற்ற கட்சியை அவமானப்படுத்தும். ஆனால் உண்மையில் மக்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட சொத்துகள் ஒரு போதும் மீட்கப்படுவதில்லை ஏனென்றால், அடுத்த தேர்தலில் இன்றைய தோல்வியாளர் மீண்டும் வெற்றி பெறலாம். அப்போது இன்றைய வெற்றியாளர் சொத்துகளை மீட்க மாட்டார். நிலா அங்கேயே இருக்கிறது. சூரியன் அங்கேயே இருக்கிறது. பூமியின் மேலே உள்ள காற்று விஷமாக மாறிகொண்டிருக்கிறது. பூமியும் காற்றும் விஷமாக மாறிவிட்டது. இவ்வளவு பெரிய பிரச்சனைகள் நம்மைச் சுற்றி இருக்க, அவற்றை மறந்து பூமியையே நாம் திட்டிக் கொண்டிருக்கிறோம். அப்படியிருந்தும் நாம் என்ன செய்கிறோம்? 'எப்படியாவது பணக்காரராக வேண்டும்' என்ற ஆசையில், நிம்மதி இல்லாத வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது வாழ்க்கையா? இது மனித வாழ்க்கையா? இப்போது தெளிவு பெற வேண்டிய காலம் வந்துவிட்டது. வாழ்க்கையை அழகாக மாற்ற முயற்சி செய்ய வேண்டும். கேள்விகள் கேட்க பழக வேண்டும் மானம் மரியாதையோடு வாழ நாம் முன்வர வேண்டும். முதலில் நம் சிந்தனை மாற வேண்டும். நம் வாக்கு மாற வேண்டும் நம் வாழ்க்கை மாற வேண்டும். இனி வரும் காலங்கலாவது உண்மையாக வாழ பழகிக் கொள்ளுங்கள். இந்த பூமியில் வாழும் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து, சந்தோஷத்தை பகிர்ந்து கொண்டு வாழ நாம் அனைவரும் முன்வர வேண்டும். வாழ்க மனிதநேயம். வாழ்க இந்த உலகம் அனைவரும் வாழ்க வளமுடன்.

"சேவை செய்வதே உயர்ந்த வழிபாடு"

**சமூக சேவகர் :**



M.ஆடலரசன் B.A. History

என் உயிர் சொந்தங்களுக்கும், உறவுகளுக்கும்,
இந்த சமுதாயத்தின் நல்ல உள்ளங்களுக்கும்
என் மனமார்ந்த வணக்கம்.
இந்த உலகத்தில் நாம் வாழ்கிறோம்.
ஆனால் உண்மையில் இந்த உலகத்திற்கு நாம்
என்ன செய்து கொண்டிருக்கிறோம்?
பணம், பதவி, புகழ் இதற்காகவே ஓடிக்கொண்டிருக்கும்
இந்த வாழ்க்கையில், மனிதநேயம் எங்கே இருக்கிறது?
பசித்தவனுக்கு ஒரு வேலை உணவு, படிக்க முடியாத குழந்தைக்கு
ஒரு புத்தகம், உதவி தேவைப்படும் முதியவருக்கு ஒரு கை, இதுதான் உண்மையான மனித வாழ்க்கையின் அர்த்தம். அதற்காகத்தான் உலக மக்கள் சமூக சேவை சங்கம் தொடங்கப்பட்டது. எங்கள் நோக்கம் அரசியல் இல்லை, எங்கள் நோக்கம் ஜாதி இல்லை. எங்கள் நோக்கம் மதம் இல்லை எங்கள் ஒரே நோக்கம்– மனிதநேயம். பிச்சை எடுக்கும் மனிதனுக்கும் மரியாதையுடன் வாழும் உரிமை இருக்கிறது. ஏழை குழந்தைக்கும் கல்வி பெறும் உரிமை இருக்கிறது. உதவியில்லாத குடும்பத்துக்கும் நம்பிக்கையோடு வாழும் உரிமை இருக்கிறது. இந்த உரிமைகளை புத்தகங்களில் மட்டும் எழுதி வைக்காமல், நிஜ வாழ்க்கையில் நடைமுறை யில் கொண்டு வரவே நாங்கள் முயற்சி செய்கிறோம். ஒரு பள்ளிக்கூடம் கட்டுவது ஒரு கட்டிடம் மட்டும் இல்லை அது ஒரு தலைமுறையின் எதிர் காலத்தை கட்டுகிறது.

ஒரு ஏழைக்கு உதவி செய்வது காசு கொடுப்பது இல்லை அது ஒரு வாழ்க்கைக்கு நம்பிக்கை கொடுப்பது.சமுதாயம் மாற வேண்டும் என்றால் முதலில் நாம் மாற வேண்டும்.நம் சிந்தனை மாற வேண்டும், நம் செயல்கள் மாற வேண்டும். நம் மனம் மனிதநேயமாக மாற வேண்டும். உலக மக்கள் சமூக சேவை சங்கம் இந்த மாற்றத்திற்கான ஒரு சிறிய முயற்சி. எங்கள் பயணம் பெரியதாக இல்லாமலிருக்கலாம். ஆனால் உண்மையுள்ளதாக இருக்கும். எங்கள் உதவி அதிகமாக இல்லாமலிருக்கலாம்.ஆனால் இதயத்திலிருந்து வரும். இந்த பூமியில் வாழும் ஒவ்வொரு மனிதனும் மரியாதையுடன், சந்தோமாக பாதுகாப்பாக வாழ நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். வாழ்க மனிதநேயம் வாழ்க வளர்க சேவை மனம் வாழ்க உலக பொதுமக்கள் ஒன்றிணைந்த சமூக சேவை சங்கம்.

"சேவை செய்வதே உயர்ந்த வழிபாடு"

## சமூக சேவகர் :



பெண்– குடும்பத்தின் தூண்
ஒரு பெண்வீட்டின் பொறுப்பை மட்டும் ஏற்றுக்
கொள்ளவில்லை,
சமூகத்தின் சுமையையும் மனதில் சுமந்து நடக்கக் கூடிய
சக்தி பெற்றவள். அந்த பெண் சமூக சேவைக்குள்
காலடி எடுத்து வைத்தால். அது ஒரு உதவி அல்ல...
ஒரு மாற்றத்தின் தொடக்கம்.

**AR.SOBA DEVI,** MBA.,MA.,
(Journalism). M.SC(Psy).,M.L.I.S.,D.E.T.,B.Sc.,
B.Ed ,D.F.D.,Dip.dance.,B.music.,D.M.C.Ed.,
D.C.P.M.,D.F.A

சமூக சேவைக்குள் ஒரு பெண் ஏன் வர வேண்டும்?
சகோதரிகளே, பெண்கள் அனுபவிக்கும் பிரச்சனைகளை ஒரு பெண்ணால் தான் முழுமையாக உணர முடியும்.
கல்வி மறுக்கப்பட்ட குழந்தைகள், பாதுகாப்பு இல்லாத பெண்கள் ஏழ்மை,
வேலை இழப்பு,
சுகாதாரம் பற்றிய அறியாமை
இந்த எல்லாவற்றுக்கும் ஒரு தாயின் மனமும்,
ஒரு சகோதரியின் துணிச்சலும் சேர்ந்த தீர்வு தேவை.
இந்த சமூக சேவை பயணம் மூலம்
கல்வி வாய்ப்பு இல்லாத குழந்தைகளுக்கு வழிகாட்டுதல்
பெண்களுக்கு சட்ட உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு
சுயதொழில், சுயநம்பிக்கை பயிற்சிகள்,
சுகாதாரம், பாதுகாப்பு குறித்த ஆலோசனைகள்
பாதிக்கப்பட்டவர்களுக்கு சரியான திசை காட்டுதல் போன்ற சேவைகளை
மனிதாபிமானத்தோடும், நேர்மையோடும், நம்பிக்கையுடனும்
செய்யும் உறுதியுடன் இந்த பயணம் தொடங்கப்பட்டிருக்கிறது.
சமூக சேவை என்பது பணம் கொடுப்பது மட்டும் அல்ல
ஒரு குழந்தையை பள்ளிக்கு அனுப்புவது
ஒரு பெண்ணிர்கு தைரியம் கொடுப்பது
ஒரு குடும்பத்துக்கு நம்பிக்கை தருவது இதுவே உண்மையான சமூக சேவை.
ஒவ்வொருவரும் ‘என்னால் என்ன செய்ய முடியும்? என்ற ஒரு கேள்வி
கேட்டுக்கொண்டால் அதிலிருந்தே சமூக மாற்றம் தொடங்கும்.




“சேவை செய்வதே உயர்ந்த வழிபாடு”

## சமூக சேவகர் :



நட்ராஜன் முத்துக்குமார் B.Com.,

இந்த சமுதாயத்தில் பலருக்கு கல்வி, சுகாதாரம்,
வேலைவாய்ப்பு, வீடு போன்ற அடிப்படை தேவைகள்
கூட எட்டாத நிலை, அப்படிப்பட்ட சூழலில்
சமூக சேவகர் ஒருவர் தேவைப்படுகிறார்
சமூக சேவை ஒரு தொழில் அல்ல;
அது ஒரு பொறுப்பு, ஒரு மனப்பான்மை,
ஒரு மனிதநேயம்.
ஒரு குழந்தை கல்வியின்றி தவிக்கும் போது,
ஒரு குடும்பம் வறுமையில் திணறும்போது,
ஒரு பெண் அநீதிக்கு ஆளாகும்போது, ஒரு மாற்றுத்திறனாளி
புறக்கணிக்கப்படும்போது அவர்களுக்காக குரல் கொடுப்பதே சமூக சேவை,
நாம் பெரிய உதவிகள் செய்ய வேண்டியதில்லை.
ஒரு மாணவனின் கல்விக் கட்டணம், ஒரு நோயாளிக்கான மருந்து உதவி, ஒரு
குடும்பத்திற்கான உணவு, ஒரு வேலை இழந்தவருக்கு வழிகாட்டுதல் –இதுவே ஒரு
மனிதனின் வாழ்க்கையை மாற்றும் சக்தி கொண்டது.

‘நான் ஒருவன் மட்டும் என்ன செய்ய முடியும்?‘
என்று நினைக்க வேண்டாம்.
ஒரு தீபம் மற்றொரு தீபத்தை ஏற்றுவது போல,
ஒரு நல்ல செயல் இன்னொரு நல்ல செயலுக்கு வழிவகுக்கும்.
சமூக சேவை என்பது புகழுக்காக அல்ல, அரங்கிற்காக அல்ல,
புகைப்படத்திற்காக அல்ல– மனசாட்சிக்காக செய்யப்பட வேண்டிய ஒன்று.
இன்றைய இளைஞர்கள் சமூக சேவையில் ஈடுபட்டால்,
நாளைய சமுதாயம் நிச்சயம் சிறந்ததாக மாறும்.
‘எனக்காக மட்டும்‘ என்ற எண்ணம் மாறி "எல்லோருக்காகவும்" என்ற சிந்தனை
உருவாக வேண்டும்.
இறுதியாக, உதவி பெறுபவரின் கண்ணீரை துடைக்கும் கரங்களாகவும்,
நம்பிக்கை இழந்தவர்களுக்கு ஒளியாகவும்,
சமுதாய மாற்றத்தின் விதையாகவும் நாம் அனைவரும் செயல்பட வேண்டும்.
மனிதநேயம் வாழ்க! சமூக சேவை வளர்க!

“சேவை செய்வதே உயர்ந்த வழிபாடு”

## சமூக சேவகர் :



M.அலமேலு

B.Sc,M.A,M.ed, Retired Teacher
(B.T Assistant) Govt High School.

என் வாழ்க்கையின் பெரும்பகுதியை நான் குழந்தைகளுடன் கழித்தேன். குறிப்பாக ஏழை குடும்பங்களைச் சேர்ந்த பெண் குழந்தைகள் கல்வி கற்க வேண்டும் என்ற எண்ணமே என்னை முன்னே கொண்டு சென்றது.
ஏழ்மை காரணமாக பல கனவுகள் பாதியிலேயே நின்றுவிடக் கூடாது என்று நான் நம்புகிறேன்.
ஒரு பெண் குழந்தைக்கு கல்வி கிடைத்தால்,
அவள் வாழ்க்கை மட்டும் மாறாது.
ஒரு குடும்பத்தின் எதிர்காலமே மாறும்.
அதனால் தான் நான் எப்போதும் சொல்லிக் கொண்டிருப்பேன்.
கல்வி என்பது உதவி அல்ல; அது உரிமை.
இன்று நான் ஓய்வு பெற்றிருந்தாலும், என் பணி ஓய்வுபெறவில்லை.
இனி நான் விரும்புவது என்னவென்றால்
ஏழை மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக வழிகாட்ட வேண்டும்.
அவர்கள் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற உதவிட வேண்டும்.
அவர்களுக்கு பயமில்லாமல் படிக்க தைரியம் கொடுக்க வேண்டும்.
மதிப்பெண் என்பது ஒரு எண் மட்டும் அல்ல; அது ஒரு வாய்ப்பு.
அந்த வாய்ப்பை யாரும் இழக்கக் கூடாது.
என் வேண்டுகோள் என்னவென்றால்
பெற்றோர்கள் உங்கள் குழந்தைகளை நம்புங்கள்.
குழந்தைகளே, உங்கள் கனவுகளை நம்புங்கள்.
கல்வியே உங்கள் வாழ்க்கையை உயர்த்தும் மிகப்பெரிய ஆயுதம்.
நான் என் வாழ்க்கையை அளவிடுவது பதக்கங்களால் மட்டுமல்ல;
ஒரு மாணவி மருத்துவராக ஆன செய்தி கேட்டால்,
ஒரு பெண் குழந்தை ஆசிரியையாக உயர்வதை பார்த்தால்
அந்த சிறப்புகளே எனக்கு பெருமை. நான் இன்னும் சொல்ல விரும்புவது
நாம் ஒன்றிணைந்தால் பல குழந்தைகளின் எதிர்காலத்தை மாற்ற முடியும்.
சிறிய உதவி கூட ஒரு பெரிய மாற்றத்தை உருவாக்கும்.

நன்றி!
என் பயணம் தொடரும் !

"சேவை செய்வதே உயர்ந்த வழிபாடு"



**J.அருண்** Social worker &
PRTC Department, Puducherry



**R.சரண்ராஜ்**
Diploma Safety Industrial Engineer

## சமூக சேவகர் :

மனிதநேயத்தை முன்னிறுத்தும் தலைவர்களுக்கும், இந்த அமைப்பின் தூண்களாக இருக்கும் அனைவருக்கும் என் அன்பான வணக்கம்.

சிறுவயதிலிருந்தே ஒரு எண்ணம் எங்கள் மனதில் இருந்தது மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம்.அது ஒரு நாள் தோன்றிய சிந்தனை அல்ல.

நாம் வளர்ந்தபோதெல்லாம், வாழ்க்கையின் பல தருணங்களில், மற்றவர்களின் கஷ்டங்களை பார்த்தபோதெல்லாம் அந்த எண்ணம் இன்னும் விரிவாக வளரத் தொடங்கியது. ஆனால் ஒரு கேள்வி எப்போதும் இருந்தது எப்படி உதவி செய்வது? யாருடன் இணைந்து செயல்படுவது? நல்ல மனம் கொண்ட மனிதர்களுடன் சேர்ந்து பயணிக்க என்ன செய்ய வேண்டும்? சரியான வழியும், சரியான மனிதர்களும் கிடைக்க வேண்டுமே என்ற பல கேள்விகள் உள்ளத்தில் நீண்ட நாட்களாக அலமோதிக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் தான் உலகப் பொதுமக்கள் ஒன்று சேர்ந்து செயல்படும் இந்த சமூக சேவைச் சங்கம் எங்களுக்கு அறிமுகமானது. இது ஒரு சாதாரண அமைப்பு அல்ல என்று உணர்ந்தோம். இது மனிதநேயத்தை முன்னிறுத்தும் ஒரு இயக்கம். இது மனசாட்சியோடு செயல்படும் நல்ல உள்ளங்களின் கூட்டமைப்பு. இதுவே நாங்கள் தேடிய பாதை என்று எங்கள் மனம் சொல்லியது. அதனால் தான், இந்த சங்கத்தில் இணைந்து எங்கள் சிறுவயது கணவான மக்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்றி ஒன்றிணைந்து செயல்படுகிறோம். அதற்காக எங்களால் முடிந்ததை முழு மனதுடன் உதவுவோம், அதுவே எங்கள் உறுதி.

நன்றி !

"சேவை செய்வதே உயர்ந்த வழிபாடு"

# கடலூர் மாவட்டம், வடலூரில் மக்கள் சேவையில் சிறுவனுக்காக
# வீடு கட்டி தர முடிவு செய்யப்பட்டுள்ளது




கடலூர் மாவட்டம், வடலூர் பகுதியைச் சேர்ந்த அகத்தியன் என்ற இந்த சிறுவன், சிறுவயதிலிருந்தே கடுமையான தோல் நோயினால் பாதிக்கபட்டுள்ளார். அந்த நோயின் தாக்கம் காரணமாக, இவருடைய உடல் தோற்றம் தீக்காயம் ஏற்பட்டதுபோல் காணப்படுகிறது.

இந்த நிலையை அறிந்த நமது மக்கள் சேவை சங்கம் மூலமாக, ஆரம்ப கட்டமாக இந்த குழந்தைக்கு சிறு சிறு உதவிகள் செய்து வந்தோம். தற்போது, மருத்துவரின் ஆலோசனையின்படி, இந்த சிறுவன் ஆரோக்கியமாக வாழ சுத்தமான, தேவையான வசதிகள் கொண்ட ஒரு வீடு அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த குடும்பம் மிகுந்த ஏழ்மை நிலையில் வாழ்ந்து வருவதால், வீடு கட்டும் வசதி இல்லாமல் தவித்து வருகிறது.
அதனால், நமது உலக பொதுமக்கள் ஒன்றிணைந்த சமூக சேவை சங்கத்தின் முயற்சியால், சுமார் **7 லட்சம்** ரூபாய் செலவில் ஒரு வீடு கட்டித் தருவதற்காக சங்கத்தின் மூலமாக நிதி திரட்டுவதற்கான முயற்சி செய்து கொண்டு வருகிறோம். விரைவில் இந்த சிறுவனுக்கான வீடு கட்டி முடிக்கப்பட்டு, பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான வாழ்விடம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஒன்றியம், பள்ளிக்கூடம் கட்டித்தர உலக பொதுமக்கள் ஒன்றிணைந்த சமூக சேவை சங்கம் சார்பில் 2026 வருடம் கட்டித்தர வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## பள்ளியின் கோரிகையை ஏற்று ரூ. 8 லட்சம் செலவில் சங்கத்தின் மூலம் ஏற்பாடு நடைபெற்றுவருகிறது.





அனுப்புநர்: தலைமையாசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி.
ஈச்சங்குப்பம்.
விக்கிரவாண்டி ஒன்றியம்.
விழுப்புரம் மாவட்டம்.

பெருநர்: உலக மக்கள் சமூக சேவை சங்க உறுப்பினர்கள்,
உலக மக்கள் சமூக சேவை சங்கம்.

வணக்கம்

எங்களது பள்ளி விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஒன்றியம் ஈச்சங்குப்பம் கிராமத்தில் அமைந்துள்ளது. பள்ளி அமைந்துள்ள கிராமம் மிகவும் பின்தங்கியுள்ள கிராமமாக உள்ளது. மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை எழுபது (70) மாணவர்கள் இங்கு படிக்கிறார்கள்.

விழுப்புரம் மாவட்டம் கெடார் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தங்களின் அறக்கட்டளை சார்பாக கழிப்பறை வசதி ஏற்படுத்திக் கொடுத்ததாக சக ஆசிரியர்கள் மூலம் நாங்கள் தெரிந்துகொண்டோம்.

எங்களது பள்ளியில் மாணவர்களின் சேர்க்கை மிகவும் குறைந்து வருவதால் சேர்க்கையை அதிகரிக்க பள்ளியின் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

குறைந்த மாணவர்களின் எண்ணிக்கையை பொறுத்து பள்ளி மானியமும் குறைவாகவே கிடைப்பதால் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்ய இயலவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் எங்களது பள்ளி உள் கிராமத்தில் அமைந்துள்ளது. மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள பெற்றோர்களின் குழந்தைகள் தான் இங்கு கல்வி பயின்று வருகின்றனர். நன்கு படிக்கக்கூடிய ஆர்வமுள்ள இந்த மாணவர்களின் கல்வித்தரத்தை அதிகரிக்க பள்ளியின் வசதிகளை மேம்படுத்த வேண்டி உள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஆண்டு விழாவிற்காக அரசு ரூபாய் 2000 மட்டுமே வழங்குவதால் ஆண்டு விழாவை மேடை அமைத்து சிறப்பாக செய்ய இயலவில்லை. எனவே தங்களது நல சங்கம் சார்பாக எங்கள் பள்ளிக்கு ஒரு விழா மேடை அமைத்துக் கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

- மேலும் SMART CLASS நவீன முறையில் ஏற்படுத்த வேண்டுதல், பள்ளி வளாகத்தில் உள்ள மூன்று வகுப்பறைகளுக்கு வெளியே SS கைப்பிடியுடன் கூடிய சாய்தள நடைபாதை அமைத்தல், குடிநீர் தளம் சற்று உயரமாக இருப்பதால் மாணவர்கள் ஏறி நிற்க மிகவும் சிரமப்படுகிறார்கள் எனவே மாணவர்கள் நிற்க மேடை அமைத்தல், கழிவறையை சீரமைத்துத் தரும்படியும் கேட்டுக்கொள்கிறோம்.

எனவே ஏழை மாணவர்கள் கல்விப் பயிலும் எங்கள் பள்ளிக்கு தங்களின் நல சங்கம் மூலமாக மேற்கண்ட கோரிக்கைகளில் தங்களால் இயன்றதை நிறைவேற்றித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மிக்க நன்றி

இடம்:

நாள்:

தங்கள் உண்மையுள்ள
06/01/26
தலைமை ஆசிரியர்
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி
ஈச்சங்குப்பம்
விக்கிரவாண்டி ஒன்றியம்
விழுப்புரம் மாவட்டம்.

PANCHAYAT UNION MIDDLE SCHOOL
Date: 06/01/26
Vikravandi Block
Villupurram Dist
Sc No.252101047
EACHANKUPPAM - 605 203

**பள்ளியின் கோரிக்கைகள் : SMART CLASS நவீன முறையில் மாற்றுதல், சாய்தள நடைபாதை, குடிநீர் தளம், மேடை அமைத்தல், கழிவறையை சீரமைத்தல்**

# திருவண்ணாமலை மாவட்டம்,
# கேடார் கிராமத்தில் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 8 லட்சம் செலவில் கழிப்பிடம் கட்டித்தரப்பட்டது.














திருவண்ணாமலை மாவட்டம், கேடார் என்ற கிராமத்தில் செயல்பட்டு வரும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், மாணவிகளின் கல்வி வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், ஒரு சிறப்பான நற்பணி கடந்த வருடம் நிறைவேற்றப்பட்டது. அந்த பள்ளியில் உள்ள நான்கு கழிப்பறைகள் தேர்தெடுக்கப்பட்டு, ஒரு கழிப்பிடம் புதிதாக கட்டப்பட்டு, மூன்று கழிப்பிடங்கள் முழுமையாக புதுப்பிக்கப்பட்டு, சுமார் **8 லட்சம் செலவில்** இந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நற்பணி, 2025 ஆம் ஆண்டு **ஜனவரி 3ஆம் தேதி, வெற்றிகரமாக நிறைவு பெற்றது.**

இவ்வளவு பெரிய சமூக சேவையை சாத்தியமாக்கியவர்கள், வெளிநாட்டுவாழ் தமிழர் நல சங்கம், திரு. சுப்ரமணியன் ஐயா அவர்கள் மற்றும் அவர்களுடன் பிற நல்ல உள்ளங்கள் இணைந்து செய்தனர்.





பெண் கல்வி என்பது ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்காக அது ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கான அடித்தளமாகும். அதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் உருவாக்கப்படும் போது, மாணவிகள் தன்னம்பிக்கையுடன் கல்வி கற்க முடியும். அந்த வகையில், இந்த கழிப்பிட மேம்பாட்டு திட்டம், அந்த பள்ளி மாணவிகளின் பாதுகாப்பையும், சுகாதாரத்தையும், கல்விச் சூழலையும் உயர்த்திட ஒரு முக்கியமான முயற்சியாக அமைந்துள்ளது. இந்த நற்பணி, சமூக பொறுப்புணர்வும் மனிதநேயமும் இணைந்தால் கல்வித் துறையில் எத்தனை நல்ல மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்பதற்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்த சேவையில் பங்களித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்வது எங்களின் கடமையாகும்.


## ரூ. 8 லட்சம் செலவில் திருவண்ணாமலை மாவட்டம், கெடார் அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் திரு.சுப்ரமணியன் தலைமையில் ஆதிநவீன கழிவறை கட்டப்பட்டது.










S.A. ... MSC. MEd. MPhil.
TRUST,
தலைமை ஆசிரியர்,
அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி
கெடார்-605 402.

: 183/24 : 05.11.2024.

TOILET 04.
URINAL 20

730 6 12

TOILET
URINAL 20

GOVT. GIRLS HR. SEC. SCHOOL
KEDAR
605 402.

5/11/24
தலைமை ஆசிரியர்,
அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி
கெடார்-605 402.







# புதுச்சேரியில் ஒரு வீடு! ஒரு நம்பிக்கை!! ஒரு எதிர்காலம்!!!















பழைய வீடு


புதிய வீடு

ராகுலின் பள்ளி படிப்பிற்காக மனமுவந்து உதவி செய்த நல்ல உள்ளங்களுக்கு எங்கள் சங்கம் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது. முதலாவதாக, துபாயில் இருந்து எங்களை நினைத்து, ராகுலின் கல்விக்காக தாராளமாக உதவி செய்த திரு ஹாசன் அவர்களுக்கு எங்கள் இதயங்கனிந்த நன்றிகள். தூரத்தில் இருந்தாலும், மனிதநேயத்தில் நெருக்கமாக இருந்து உதவி செய்தது உண்மையிலேயே பாராட்டத்தக்கது.

அதேபோல், அந்தமானில் இருந்து அன்புடன் துணைநின்ற திருமதி. சோபியா அவர்களுக்கும் எங்களின் நன்றியை மனப்பூர்வமாக தெரிவித்துக் கொள்கிறோம். இவர்களின் போன்றோரின் ஆதரவு ராகுலின் எதிர்காலத்திற்கு ஒளிவிளக்காக இருக்கும்.

# புதுவையின் ராகுலின் வாழ்க்கையில் மனிதநேயத்தின் மறக்க முடியாத அத்தியாயம்

பாண்டிச்சேரியைச் சேர்ந்த சிறுவன் ராகுல். வயது குறைவு, ஆனால் வாழ்க்கை அவனை சிறுநீரகம் மிகப்பெரிய சோதனைக்கு உட்படுத்தியது. ராகுலின் தந்தை கிட்னி செயலிழப்பு காரணமாக தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகிறார். உடல்நிலை பலவீனம், குடும்பத்தின் வருமானம் குறைவு ஒரு கட்டத்தில் பள்ளிக் கட்டணம் கூட செலுத்த முடியாத நிலை. படிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தும், வாய்ப்புகள் இல்லாத சூழல். கல்வி காப்பாற்றப்பட வேண்டிய தருணம் அந்த நேரத்தில் NPS தமிழ் சேனல் மற்றும் உலக மக்கள் ஒன்றிணைந்த சமூக சேவை சங்கம் இணைந்து அந்த குடும்பத்தை நேரில் சந்தித்து நிலைமையை ஆய்வு செய்தன. இந்த குழந்தையின் கல்வி நின்றுவிடக் கூடாது என்ற முடிவுடன் ₹25,000 பள்ளிக் கட்டணம் உடனடியாக செலுத்த ஏற்பாடு செய்து பணம் செலுத்தப்பட்டது. அது ஒரு கட்டணம் அல்ல ஒரு கனவை காப்பாற்றிய செயல். மழை பெய்தால் நீர் ஒழுகும், பாதுகாப்பற்ற, சேதமடைந்த சுவர்கள் போன்ற சூழலில். அந்த நிலையை மாற்ற வேண்டும் என்ற தீர்மானத்துடன் உலக மக்கள் ஒன்றிணைந்த சமூக சேவை சங்கம் மற்றும் NPS தமிழ் சேனல் இணைந்து புதிய வீடு கட்ட முடிவு செய்யப்பட்டது.

அந்த மனிதநேய முயற்சிக்கு குவைத்தில் உள்ள திரு. அமீர் / டிராவல்ஸ் கிளப் அவர்களின் மனமார்ந்த ஆதரவு மற்றும் *Sponsor* உதவி முக்கிய பங்காற்றியது. அவர்களின் பொருளாதார ஆதரவுடன் சுமார் ₹5 லட்சம் செலவில் பாதுகாப்பான, சுத்தமான, உறுதியான ஒரு புதிய வீடு கட்டி வழங்கப்பட்டது. ஒரு சமூக சேவை சங்கம், ஒரு ஊடக இயக்கம், ஒரு நற்பண்பு கொண்ட தொழில் முனைவோர், மூன்று சக்திகள் இணைந்தபோது ஒரு குழந்தையின் வாழ்க்கை மாறியது. இன்று ராகுல் பாதுகாப்பான இல்லத்தில் வாழ்கிறான். அவன் கல்வி தொடர்கிறது. மனிதநேயத்தின் உயிரோட்டம் இந்த செயல் ஒரு செய்தி அல்ல. ஒரு சமூக ஒற்றுமையின் சாட்சி. NPS தமிழ் சேனல் உலக பொதுமக்கள் ஒன்றிணைந்த சமூக சேவை சங்கம், உதவும் கைகள் மற்றும் அமீர் டிராவல்ஸ் கிளப் இணைந்து செய்த இந்த மனிதநேய செயல் ஒரு குடும்பத்திற்கு புதிய வாழ்க்கையை வழங்கியுள்ளது. இன்னும் பல ராகுல்களின் வாழ்க்கையில் ஒளி ஏற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



TravelClub
Travel & Tourism

GLOBAL JAMALIANS & FRIENDS

# வெளிநாட்டு மோகத்தால் பெண்களே ஏமாறாதீர்

**கை நிறைய ஊதியம் என கூறி விசா தரும் வெளிநாட்டு முதலாளியுடன் பல இலட்சம் பணம் பெற்று மோசடியில் ஈடுபடும்**

## போலி ஏஜண்டுகளே ஏமாற்றாதீர்

**திருவண்ணாமலையில்**

மாபெரும்

# விழிப்புணர்வு பேரணி

**நாள் 03.01.2025 வெள்ளிக்கிழமை**
**இடம் : பஸ் நிலையம் அருகில் - திருவண்ணாமலை**
**நேரம் ; காலை 7.45 மணி முதல் 9.30 மணி வரை**

*திருவண்ணாமலை பகுதியில் இருந்து வெளிநாட்டிற்கு சென்று போலி ஏஜண்டுகளால் ஏமாற்ற பட்ட ஆண்கள் பெண்கள் அனைவரும் திரளாக கலந்து கொள்ள அழைக்கிறோம்

*அனைத்து கட்சியினரும், வியாபாரிகள் சங்கத்தினர், மாதர் சங்கம், இளைஞர் மன்றம் மற்றும் அமைப்பினர், சங்கத்தினர் , ஜமாத்தார், சமூக ஆர்வலர்கள்
**அனைவரும் கலந்து கொள்ள அழைக்கின்றோம்**

<u>நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு</u>

**வெளிநாடு வாழ் தமிழர்கள் நலச்சங்கம்**
**வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் நலச்சங்கம்**
**வெளிநாடு வாழ் தமிழர்கள் நல அறக்கட்டளை**
**குவைத் மண்டலம் - தமிழ்நாடு - பாண்டிச்சேரி**

# திருவண்ணாமலையில் மாபெரும் விழிப்புணர்வு பேரணி









திருவண்ணாமலையில்

## வெளிநாடு வாழ் தமிழர் நலச்சங்கம் சார்பில் விழிப்புணர்வு ஆர்ப்பாட்டம்

### சி.என்.அண்ணாதுரை எம்.பி. தொடங்கி வைத்தார்

திருவண்ணாமலை, ஜன.4- திருவண்ணாமலை அறிவொளி பூங்கா எதிரில் வெளிநாடு வாழ் தமிழர் நல அறக்கட்டளை மற்றும் நலச்சங்கம் சார்பில் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன் காத்திட போலி ஏஜெண்டுகளிடம் தமிழர்கள் ஏமாறாமல் தடுத்திட வலியுறுத்தி விழிப்புணர்வு ஆர்ப்பாட்டம் நேற்று காலை நடைபெற்றது. மாநில பொதுச்செயலாளர் கே.வி. கண்ணன் தலைமை தாங்கினார். மகளிரணி செயலாளர்கள் உண்ணாமலை, முல்லை, செல்வி, சாந்தி, ஆயிசா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில துணை பொதுச்செயலாளர் நூர்முகமது வரவேற்றார். வெளிநாடு வாழ் தமிழர் நலச்சங்கத்தின் நிறுவனர் நெல்லை மரைக்காயர் விழிப்புணர்வு ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் குறித்து விளக்கி பேசினார்.

சிறப்பு அழைப்பாளராக சி.என்.அண்ணாதுரை எம்.பி. கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். இதில் மாநில செயல் தலைவர் உஸ்மான்கான், திருவண்ணாமலை மாநகராட்சி மேயர் நிர்மலாவேல்மாறன், தி.மு.க. நகர செயலாளர் கார்த்தி வேல்மாறன், தி.மு.க. அயலக அணி மாவட்ட செயலாளர் ஏ.டபிள்யு.சர்தார்காசிம் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாநில துணைத்தலைவர் நூருல்லா நன்றி கூறினார்.

தின குரல்
90800 52541
RNI-DAVP EMPANALED NEWSPAPER
Postal Registered No. TN/CDL/15/2023/2025
தேசிய நடுநிலை நாளிதழ்

## விழுப்புரத்தில் வெளிநாடு வாழும் தமிழர்கள் நல சங்கம் அறக்கட்டளை ஏழாம் ஆண்டு துவக்க விழா நடைபெற்றது



விழுப்புரம், ஜன,05

விழுப்புரம் தனியார் திருமண மண்டபத்தில் வெளிநாடு வாழ் தமிழர்கள் நல சங்கம் மற்றும் வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் நலசங்கம் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நல அறக்கட்டளை சார்பில் குவைத் மறைகர் ஐயா அவர்களின் தலைமையில் ஏழாம் ஆண்டுதுவக்கவிழா மற்றும் மாநில செயற்குழு பொதுகுழு சிறப்பு கூட்டம் நடைபெற்றது விழாவில் பரதநாட்டியம் மற்றும் தப்பாட்டம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் வெளிநாட்டில் பயணம் செல்வர்கள் அங்கு தங்கி வேலை பார்க்கும் தமிழர்களுக்கு எந்த ஒரு பிரச்சனை இருந்தாலும் அது சிறப்பாக பாதுகாப்பாக வழி நடத்திய புரசர் உதவி கைகள் அறக்கட்டளை மற்றும் அகம் அறக்கட்டளை மற்றும் விடுதலை சோசியல் வெல்பர் அறக்கட்டளை ஆகியோர் இணைந்து சிறப்பாக செயல் பட்டதற்காக அறக்கட்டளைக்கு மற்றும் பெஞ்சில் புயல் மழை காலங்களில் சிறப்பாக செயல்பட்ட நகராட்சி தூய்மைபணியாளர்களுக்கு கௌரவிக்கும் வகையில் சிறப்பு விருந்தினராக விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் இலட்சுமணன் அவர்கள் கலந்து கொண்டு பாராட்டுக்கள் கேடியம் வழங்கினார்

இதனைத் தொடர்ந்து தூய்மைபணியாளர்களுக்கு 5 கிலோ அரிசி வேட்டி சேலை வழங்கினார்

இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளர் திரைப்பட நடிகருமான திராவிடர் கழக பொதுச் செயலாளர் துரை. சந்திரசேகரன் மற்றும் மகாலட்சுமி குருப்ஸ் விழுப்புரம் பிரகாஷ் . லயன்ஸ் ஹோஸ்ட் அரிமா சங்கம் தலைவர் ராஜா .நாச்சியார் பழனி குமார், மாநில செயற்தலைவர் பொருளாளர் உஸ்மான்கான், மாநிலத்துணைப் பொதுச் செயலாளர் நூர்முகமது, மாநில துணைத்தலைவர் நூறு உல்லா,

திருவண்ணாமலை மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட செயலாளர் கேட் குமார் அயலக திமுக நிர்வாகி ஜஹாங்கீர் .

மகளிர் அணி செயலாளர் முல்லை பாண்டிச்சேரி தமிழ்நாடு பொறுப்புக் குழு தலைவர் ஆடலரசன் .தமிழ்நாடு பாண்டிச்சேரி வெளிநாடு முதன்மை செயலாளர் சோபாதேவி மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்




திருவண்ணாமலையில்

## வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன் காக்கும் விழிப்புணர்வு ஊர்வலம்

### சி.என்.அண்ணாதுரை எம்பி தொடங்கி வைத்தார்



▸ திருவண்ணாமலையில் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன் காக்கும் விழிப்புணர்வு ஊர்வலத்தை சி.என்.அண்ணாதுரை எம்பி தொடங்கி வைத்தார். உடன், நகர செயலாளர் கார்த்தி வேல்மாறன்.

**திருவண்ணாமலை ஜன.4:** திருவண்ணாமலையில் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன் காக்கும் விழிப்புணர்வு ஊர்வலத்தை சி.என்.அண்ணாதுரை எம்பி தொடங்கி வைத்தார்.

போலி ஏஜென்ட்கள் மூலம் வெளிநாடுகளுக்கு சென்று தமிழர்கள் ஏமாறுவதை தவிர்க்கும் வகையில், வெளிநாடு வாழ் தமிழர்கள் நலச்சங்கத்தின் சார்பில், திருவண்ணாமலையில் நேற்று விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது.

திருவண்ணாமலை பஸ் நிலையம் அருகே உள்ள அறிவொளி பூங்காவில் தொடங்கிய ஊர்வலத்தை சி.என்.அண்ணாதுரை எம்பி தொடங்கி வைத்து பேசினார்.

அப்போது, வெளிநாடுகளுக்கு செல்லும் தமிழர்களுக்கு தேவையான உதவிகளை செய்யவும், வழிகாட்டவும் தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறது. அதனை முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார். இதில், திமுக நகர செயலாளர் கார்த்தி வேல்மாறன், உஸ்மான், ஹாஜகான், நதியா உட்பட பலர் கலந்துகொண்டனர்.



திருவண்ணாமலையில்

வெளிநாடு வாழ் தமிழர் நலச்சங்கம் சார்பில் விழிப்புணர்வு ஆர்ப்பாட்டம்

சி.என்.அண்ணாதுரை எம்.பி. தொடங்கி வைத்தார்

திருவண்ணாமலை, ஜன.4- திருவண்ணாமலை அறிவொளி பூங்கா எதிரில் வெளிநாடு வாழ் தமிழர் நல அறக்கட்டளை மற்றும் நலச்சங்கம் சார்பில் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன் காத்திட போலி ஏஜெண்டுகளிடம் தமிழர்கள் ஏமாறாமல் தடுத்திட வலியுறுத்தி விழிப்புணர்வு ஆர்ப்பாட்டம் நேற்று காலை நடைபெற்றது. மாநில பொதுச்செயலாளர் கே.வி. கண்ணன் தலைமை தாங்கினார். மகளிரணி செயலாளர்கள் உண்ணாமலை, முல்லை, செல்வி, சாந்தி, ஆயிசா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில துணை பொதுச்செயலாளர் நூர்முகமது வரவேற்றார். வெளிநாடு வாழ் தமிழர் நலச்சங்கத்தின் நிறுவனர் நெல்லை மரைக்காயர் விழிப்புணர்வு ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் குறித்து விளக்கி பேசினார்.

# வெளிநாடுகளில் போலி ஏஜெண்டுகளால் ஏமாற்றபட்டவர்களை மனிதநேயத்துடன் மீட்ட நமது சங்கம்




















போலி ஏஜெண்டுகளை நம்பி, அவர்கள் கூறிய பொய்யான வாக்குறுதிகளால் வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்ட பல இந்தியர்கள், வாக்குறுதி அளிக்கப்பட்ட வேலைக்கு பதிலாக மாற்று வேலைகளில் அமர்த்தப்பட்டு, கொத்தடிமைப்போல் மனித மரியாதை இன்றி வேலை செய்ய வைத்த சம்பவங்கள் மிகுந்த வேதனையை ஏற்படுத்துகின்றன.

இந்த கொடுமையான சூழ்நிலையில் இருந்து தங்களது சொந்த நாட்டிற்குத் திரும்ப வேண்டும் என்ற ஏக்கம் அவர்களது மனதை நொறுக்கியது. மிகுந்த வருத்தத்துடனும், கண்ணீருடனும் தங்கள் நிலையை வெளிப்படுத்திய அவர்களின் குரல், மனிதநேய அமைப்புகளின் கவனத்தை ஈர்த்தது.

அந்த வகையில், வெளிநாடு வாழ் சங்கம் மற்றும் என்பிஎஸ் தமிழ் சேனல் ஆகியவற்றின் மனிதநேய உதவியுடன், பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். தொடர்ந்து, குவைத்தில் செயல்பட்டு வரும் இந்தியன் எம்பஸ்சி, உலக நாடுகளிலுள்ள பிற எம்பஸ்சிகளுடன் தொடர்பு கொண்டு, உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட அனைவரையும் நல்ல ஆதரவுடன் இந்தியாவிற்கு அழைத்து வர முக்கிய பங்கு வகித்தது.

இந்த மீட்பு நடவடிக்கை, மனிதநேயமும் சமூக பொறுப்பும் ஒன்றிணைந்தால் எத்தனை உயிர்களை பாதுகாக்க முடியும் என்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். போலி ஏஜெண்டுகளின் ஏமாற்றங்களுக்கு எதிராக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதையும், சிக்கலில் சிக்கியவர்களுக்கு துணை நிற்பதே உண்மையான மனிதத்தன்மை என்பதையும் இந்த சம்பவம் நமக்கு உணர்த்துகிறது.

# மனிதநேயத்தின் பாதையில்
## NPS தமிழ் சேனல்

வெளிநாட்டில் வாழும் தமிழர்களின் வாழ்க்கை எப்போதும் சுலபமல்ல. புதிய நாடு புதிய சூழல் அறிமுகமில்லா மொழி ஆனால் மனதில் ஒரே ஆசை குடும்பத்துக்காக வாழ வேண்டும். அந்த நேரத்தில், ஒரு உதவி கை தேவைப்படும் போது, ஒரு குரல் கேட்கும் போது, ஒரு நம்பிக்கையை தேடும் போது அந்த நம்பிக்கையின் பெயராக உருவெடுத்தது NPS தமிழ் சேனல் நேர்மையின் பயணம். சேனல் மட்டும் அல்ல சமூக இயக்கம் செய்திகளை வெளியிடுவது மட்டும் அல்ல, செயல் மூலம் உயிர்களை காப்பாற்றுவது தான் இந்த சேனலின் உண்மையான அடையாளம். உலக பொதுமக்கள் ஒன்றிணைந்த சமூக சேவை சங்கம் உடன் இணைந்து, உலக நாடுகளில் உள்ள வெளிநாடு வாழ் தமிழர்கள் சங்கம் குடும்பத்தோடு சேர்ந்து, பல சமூக சேவைகள் அமைதியாகவும் உறுதியோடும் செய்து கொண்டு வருகிறோம்.

பாதிக்கப்பட்ட பெண்கள், சம்பளமின்றி சிக்கித் தவித்த தொழிலாளர்கள், மருத்துவ அவசரநிலையில் இருந்த குடும்பங்கள், சட்ட உதவி தேவைப்பட்டவர்கள் அவர்களின் கதைகள் கேட்கப்பட்டன. அவர்களின் கண்ணீர் புரிந்துகொள்ளப்பட்டது. அவர்களுக்கு துணையாக நின்றது NPS குவைத்தில் பலர் நம்பிக்கையிழந்த தருணங்களில், NPS குழு நேரடியாக தலையிட்டு அவர்களை பாதுகாப்பாக தாயகத்துக்கு கொண்டு வந்துள்ளது. மருத்துவ சிகிச்சை பெற முடியாமல் தவித்தவர்களுக்கு அவசர உதவி ஏற்பாடு செய்தது. விசா, வேலை, சட்ட சிக்கல்கள் ஒவ்வொரு பிரச்சினைக்கும் தீர்வு காண அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மனிதநேய அடிப்படையில் செயல்பட்டது இந்த இயக்கம். வெளிநாட்டில் உயிரிழந்தவர்களின் உடலை அவர்களின் குடும்பத்தினரிடம் சேர்ப்பது ஒரு சாதாரண செயல் அல்ல. ஆனால் அந்த வேதனையான தருணங்களிலும் அந்த குடும்பம் தனியாக இல்லை. அமைதியாக, பொறுப்புடன், அனைத்து நடைமுறை களையும் செய்து உடலை தாயகத்திற்கு அனுப்பி குடும்பத்திற்கு ஆறுதல் அளித்த சேவையும் NPS மற்றும் சமூக அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டது. ஒரு மனிதநேய பாலமாகவும் இயங்கி வருகிறது NPS தமிழ் சேனல். செய்தி சொல்லுவது எளிது, செயல் மூலம் மனிதரை காப்பது தான் கடினம் என்ற நம்பிக்கையோடு நேர்மை, துணிவு, பொறுப்பு என்ற மூன்று தூண்களில் இந்த பயணம் தொடர்கிறது. வெளிநாட்டில் வாழும் தமிழர்கள், நாங்கள் தனியாக இல்லை என்று சொல்லும் அளவுக்கு நம்பிக்கையை உருவாக்கிய இருக்கிறது NPS தமிழ் சேனல்.

எல்லை தெரியாத உதவி குவைத் மட்டுமல்ல துபாய், கத்தார், சவுதி அரேபியா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் உலகின் எந்த நாட்டில் இருந்தாலும் வெளிநாட்டில் சிக்கலில் இருக்கும் தமிழர்களுக்கு, அவசரநிலையில் இருக்கும் குடும்பங்களுக்கு, ஒரு சட்ட பிரச்சினை, வேலை சிக்கல், மருத்துவ அவசரம், பாதுகாப்பு பிரச்சினை என்ற எந்த ஒரு ஆபத்தான சூழ்நிலைலும் நீங்கள் தனியாக இல்லை, நாங்கள் இருக்கிறோம்.



குவைத்தில் இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது
03.12.2023
05.11.2023
குவைத்தில்
சற்றுமுன் வெளியான முக்கிய செய்தி
குவைத்தில் கொல்லப்பட்ட முத்துகுமரன்
6.12.2022
மனைவியின் பிரத்யேக பேட்டி...
அதிர்ச்சியூட்டும் பிரேத பரிசோதனை அறிக்கை வெளியாகியுள்ளது!
குவைத் முக்கிய செய்திகள்
21.10.2022
குவைத்தில் பரிதவித்த இந்திய பெண் இந்திய தூதரகத்தின் உதவியுடன் இன்று தாயகம் திரும்பினார்
18.01.2026
குவைத்துக்கு வேலைக்கு சென்றவர் 12 நாட்களாக காணவில்லை
29.06.2025
குவைத்தில் பரிதவிக்கும் தமிழகத்தை சேர்ந்த பெண்
10.06.2025
பல்லாயிரம் பேர் வேண்டுகோள்
அதிரடியில் இறங்கிய இந்திய தூதரகம்
18.10.2024
7 தமிழர்கள் நிலை
குவைத்தில்
Nermaien Payanam
குழந்தையின் சிரிப்பில் இறைவனை காணலாம்
குவைத்தில் உள்ள இந்திய தூதரகத்தின் அதிரடி நடவடிக்கையால் 6 தமிழர்களின் இன்றைய நிலைமை
21.04.2025
குவைத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் வேலைக்கு வந்தவர்கள் தாயகம் திரும்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்
16.10.2024
குவைத்தில் 08.08.2024
குவைத்தில் விபத்தில் மரணித்த தமிழர் தாயகம் அனுப்பி வைத்த வெளிநாடு வாழ் தமிழர்கள் நல நலச் சங்கம்
குவைத் தீ விபத்தில் உயிரிழந்த தஞ்சாவூரபேராவூரணி பகுதியை சேர்ந்த புனாஃப் ரிச்சர்ட் ராய் என்ற இளைஞரின் உடல் நல்லடக்கம்.
15.06.2024
குவைத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணை அதிரடியாக மீட்ட இந்திய தூதரகம்
04.01.2024
குவைத்தில்
குவைத்தில் தமிழர் மாரடைப்பால் மரணம்
11.07.2023
நாளை அவர் உடல் இந்தியா செல்கிறது
4 குழந்தைகள் இருக்குன்னு என்னை காப்பாத்துங்க இலங்கை பெண் கதறல்
குவைத்தில்
23.6.2023
நேர்மையின் பயணம்
குவைத்தில் பணிப்பெண் வேலைக்கு வந்த பெண்ணுக்கு நடந்த கொடூரம்
16.06.2023
குவைத்தில்
குவைத்தில் இருந்துபல போராட்டத்தில் முடிவில் இன்று தாயகம் திரும்பினார் கலா
01.06.2023
தன் குழந்தையின் இறுதி சடங்கில் பங்கேற்க முடியாமல் 25 நாள் கடந்து இன்று குவைத்தில் இருந்து பல போராட்டங்களை கடந்து தாயகம் திரும்பினார்
குவைத்தில் உள்ள உறவுகளுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு
தயவுகூர்ந்து அனைவருக்கும் பகிரவும்
09.05.2023
இறுதி அஞ்சலி செலுத்த தாயுடன் தகவல் தெரிவிக்க வேண்டுகிறோம்
துபாயில் பாதிக்கப்பட்ட நபர் மீட்கப்பட்டார்
நேற்று
இன்று
குவைத்தில் கொல்லப்பட்ட முத்துகுமார் வழக்கின் இன்றைய நிலவரமும்!
21.12.2022
குடும்பத்தின் நிலையும்!
கணவர் இறந்து விட்டார் கடைசியாக அவர் முகத்தை பார்க்கணும் குவைத்தில்
22.10.2023
குவைத்தில் இன்னும் எத்தனை பெண்களுக்கு இதுபோல் கொடூரம் நடக்கப்போகிறது

# திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு முத்துக்குமார் குவைத்தில் சுட்டு கொல்லப்பட்டார்

## குடும்பத்திற்கு நீதி வாங்கித் தரப்பட்டது




வேலைவாய்ப்பிற்காக குவைத் நாட்டிற்கு சென்று, ஒரு மாத காலத்திற்குள் தனது முதலாளியால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த கொடூரமான சம்பவம் அவரது குடும்பத்தையும், தமிழ்சமூகத்தையும் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இந்த அநியாய மரணத்திற்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன், **குவைத் முழுவதும், இந்தியா முழுவதும், தமிழகம் முழுவதும் மக்கள் ஒன்றிணைந்து போராடினோம்.**

இந்த தொடர் போராட்டங்களின் பயனாக, திரு முத்துக்குமார் அவர்களின் குடும்பத்திற்கு நீதி வாங்கித் தரப்பட்டது. அதோடு மட்டுமல்லாமல், அவரது உடல் தாய்நாட்டிற்கு கொண்டு வரப்பட்டு குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.
இந்த முழு நடவடிக்கைகளுக்கும் துணைநின்ற வெளிநாடு வாழ் தமிழ் சங்கம் மற்றும் **என்பிஎஸ் தமிழ் சேனல்** ஆகிய அமைப்புகளின் முயற்சிகள் பாராட்டுக்குரியவை. இதனைத் தொடர்ந்து, திரு முத்துக்குமார் அவர்களின் குடும்பத்திற்கு தேவையான நற்பணிகள் மற்றும் உதவிகளை செய்தோம்.



# உலக பொதுமக்கள் ஒன்றிணைந்த சமூக சேவையில் ஒரு பகுதி



# கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் கேரளவை சேர்ந்த 3 பேர் போலி ஏஜெண்ட் மூலம் நர்சிங் வேலை என்ற பெயரில் பெண்களுக்கு "குவைத்தில் கொடுமை" மிட்டெடுத்த சங்கம்



குவைத்தில் நர்ஸ் வேலை என்று சொல்லி அழைத்து செல்லப்பட்ட மூன்று இந்திய பெண்களின் வாழ்க்கை, அவர்கள் நினைத்தது போல் இல்லை. மனித வாழ்க்கையை காப்பாற்றும் புனிதமான நர்சிங் வேலை என்ற பெயரில் வெளிநாடு அனுப்பப்பட்ட அவர்கள், அங்கு சென்று சேர்ந்ததும் வேறு வேலைகளுக்கு கட்டாயப்படுத்தப்பட்டனர்.

**கொடுமையின் தொடக்கம் :**

குவைத்தில் வேலை என்று கூறி அழைத்து செல்லப்பட்ட இந்த பெண்கள், நர்ஸ் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் சென்றவர்கள். ஆனால், அங்கு சென்ற பிறகு அவர்கள் எதிர்கொண்டது உடல் உழைப்பு, மன அழுத்தம், சித்திரவதை, சுதந்திரம் இழந்த வாழ்க்கை. வெளியே பேச முடியாத நிலை, தொலைபேசி பறிமுதல், பயமுறுத்தல், தினமும் தாங்க முடியாத வேதனையாக மாறியது, உதவி கேட்டு வந்த குரல் ஒரு கட்டத்தில், இந்த பெண்கள் தங்கள் உயிர் காக்க உதவி தேடி அழைத்தனர். அந்த குரல், வெளிநாடு வாழ் தமிழர்கள் அமைப்புகள் மற்றும் சமூக சேவையாளர்களை சென்றடைந்தது. மீட்பு நடவடிக்கை வெளிநாடு வாழ் தமிழர் நல சங்கத்தின் முயற்சியாலும், இந்திய அதிகாரிகளின் உதவியாலும், அதிக ஆபத்தான சூழ்நிலையில் இருந்து இந்த மூன்று பெண்களும் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

பல நாட்கள் எடுத்த போராட்டம், சட்ட நடைமுறைகள், மனிதநேய முயற்சி இதன் முடிவாக, அவர்கள் சென்னை விமான நிலையத்திற்கு பாதுகாப்பாக கொண்டு வரப்பட்டனர். சென்னை விமான நிலையத்தில், NPS தமிழ் சேனல் நிர்வாகிகள் நேரில் சென்று, இந்த பெண்களை பாதுகாப்பாக அழைத்து சென்றனர். அவர்களுக்கு தேவையான உதவிகள் செய்யப்பட்டு, அவர்கள் சொந்த ஊர்களுக்கு பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

# நெய்வேலியில் கல்வி கட்டணம் நிதியுதவி வழங்கப்பட்டது



நெய்வேலியில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் கல்வி பயிலும் ஆறு மாணவர்களுக்கு கடந்த ஆண்டு முழுவதற்கான கல்விக் கட்டணத்தை செலுத்தி, அவர்களின் படிப்பிற்கு நாங்கள் உதவி செய்தோம்.

அதேபோல், வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட ஒரு மாணவரின் கல்விக்கு தேவையான நிதியுதவியையும் வழங்கினோம். அந்த மாணவரின் தந்தை முதுகுத் தண்டுப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டவராகவும், கிட்னி சரிசெய்யும் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நிலைமையிலும் இருந்ததால், அதற்கான நிதியுதவியும் வழங்கப்பட்டது.

இந்த அனைத்து உதவிகளும் NPS தமிழ் சேனல் மூலமாகவும், புரசை உதவும் கைகள் மற்றும் உலக பொதுமக்கள் ஒன்றிணைந்த சமூக சேவை சங்கம் சார்பாகவும் வழங்கப்பட்டு, தொடர்ந்து சமூக சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## திருவண்ணாமலையில்

# சிறுமிக்கு நவீன பேட்டரி வண்டி வழங்கப்பட்டது

## (பேட்டரியில் இயங்கும் வீல் சேர்)



திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த இந்த சிறுமி **ராஜேஸ்வரி** பிறவியிலேயே உடல் ஊனமுற்றவராக பிறந்துள்ளார். உடல் குறைபாடு காரணமாக அவர் பள்ளிக்கு செல்வதில் கடும் சிரமம் ஏற்பட்டதால், பள்ளிக்கு சென்று வர வசதியாக மூன்று சக்கர மிதிவண்டி (வாகனம்) வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

அந்த வேண்டுகோளை ஏற்று, உலக பொதுமக்கள் ஒன்றிணைந்த சமூக சேவை சங்கத்தின் சார்பாக, அந்த சிறுமிக்கு சக்கர வண்டி வழங்கி உதவி செய்யப்பட்டுள்ளது.

# தமிழரின் பிரேதம்
# சவூதி அரேபியாவிலிருந்து
# புதுச்சேரிக்கு பாதுகாப்பாக
# கொண்டு வரப்பட்டது



சவூதி அரேபியாவில் வேலைக்காக சென்றிருந்த ஒரு தமிழர், அங்கு துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்தார். அவருடைய மரணத்திற்குப் பிறகு, பல்வேறு சட்டச் சிக்கல்கள் மற்றும் நடைமுறை தடைகள் காரணமாக, அவரது பிரேதத்தை ஊருக்கு கொண்டு வர முடியாமல் மூன்று மாத காலம் தாமதம் ஏற்பட்டது.

இந்த கடினமான சூழ்நிலையில், வெளிநாட்டில் வாழும் தமிழர்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயல்படும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நல சங்கம் முன்வந்து தொடர்ந்து முயற்சி செய்து, அனைத்து தடைகளையும் கடந்து, இறுதியாக அந்த மறைந்த தமிழரின் பிரேதத்தை சவூதி அரேபியாவி லிருந்து புதுச்சேரிக்கு பாதுகாப்பாக கொண்டு வரப்பட்டது.

இந்த மனிதநேய முயற்சி, துயரத்தில் தவித்த குடும்பத்திற்கு ஒரு ஆறுதலாகவும், சமூகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் அமைந்துள்ளது. வெளிநாட்டில் பணியாற்றும் ஒவ்வொரு தமிழருக்கும் ஆதரவாக நிற்கும் இந்த சங்கத்தின் சேவை பாராட்டுக்குரியது.

மனிதநேயமும், சமூக பொறுப்புணர்வும் கொண்ட இத்தகைய சேவைகள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதே எங்களின் வேண்டுகோள்.

# கணவர் இறுதி சடங்கிற்கு வர முடியாமல் குவைத்தில் சிக்கிய பெண்ணை பாதுகாப்பாக மிட்கப்பட்டது.




குவைத்தில் வேலைக்காக நான்கு வருட காலமாக அங்கே இருந்த ஒரு பெண்மணி தாயகம் திரும்ப முடியாத சூழ்நிலையில் இருந்தார். திடீர் என்று கணவர் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்துள்ளார். அவர் இந்தியாவுக்கு வந்து இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள முயற்சி செய்தார், ஆனால் அவருக்கு தேவையான ஒத்துழைப்பு தரவில்லை. அவர் முதலாளி உதவவில்லை.

இந்த கடினமான சூழ்நிலையில், நாங்கள் நடவடிக்கை எடுத்து, குவைத்தில் இந்தியாவில் உள்ள (Indian Embassy) மற்றும் உலக பொதுமக்கள் ஒன்றிணைந்த சமூக சேவை சங்கம், வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் சங்கம், மற்றும் NPS தமிழ் சேனல் ஆகியோரின் ஒத்துழைப்பில், அந்த நபரை பாதுகாப்பாக மீட்டு, சரியான முறையில் தமிழகத்திற்கு அழைத்து வந்தோம்.

இத்தகைய மனிதநேய முயற்சிகள், கடின சூழ்நிலைகளிலும் சமூகத்தின் ஒற்றுமை மற்றும் நெஞ்சார்ந்த உதவியின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன. இந்த உதவிக்கு ஒவ்வொரு குழுவினருக்கும் நன்றி தெரிவித்துகொள்கிறோம்.

# செய்ய வேண்டியவை & செய்யக்கூடாதவை (Do's & Don'ts) 15 வாழ்க்கையை காப்பாற்றும் விதிகள்

1) மதுபானம் (**Alcohol**) செய்ய வேண்டியவை **&** செய்யக்கூடாதவை (**Do's & Don'ts**)

குடியிரப்பாளர்கள். உரிய உரிமம் பெற்ற மதுபானக் கடைகளில் வாங்குவதற்கு முன் தனிப்பட்ட உரிமம் பெற வேண்டும்.

இந்த உரிமம் வாங்குவதற்கானது மட்டுமே, பொது இடங்களில் அருந்த அனுமதியில்லை.

உரிமம் பெற்ற உணவகங்கள், பார்கள், கிளப்புகள், தனியார் இடங்கள் மற்றும் வீட்டில் மதுபானம் அருந்த அனுமதி உள்ளது. (உரிய உரிமம் பெற்ற குடியிருப்பாளர்களுக்கு)

வீட்டின் தனியுரிமையில் அல்லது உரிமம் பெற்ற கிளப்புகளில் நடனம் அனுமதிக்கப்பட்டது.

பொது இடங்களில் நடனம் அநாகரிகம் எனக் கருதப்படும்.

பொது இடங்களில் நடந்து செல்லும்போது மதுபானம் அருந்துதல் அல்லது பொது இடத்தில் மதுபோதையில் இருப்பது சட்டவிரோதம்.

சாலையை குறுக்கு வழியில் கடப்பதும் சட்டவிரோதம் ஆகும்.

வயது வரம்பு (**Age Limit**)

21 வயதுக்கு குறைவானவர்களுக்கு மதுபானம் கடுமையாகத் தடை தடைசெய்யப்பட வேண்டும்.

21 வயதுக்கு மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் இலவச ஒரு மாத மதுமான உரிமம் பெறலாம்.

MMI மதுபானக் கடைகளில் அசல் பாஸ்போர்டுடன் சென்று விண்ணப்பிக்க வேண்டும்.

கடுமையான அடையாள ஆவண (ID) சரிபார்ப்பு நடைமுறை உள்ளது.

தண்டனை :

விதிமீறல் செய்தால் ரூ.10லட்சம் வரை அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கபடவேண்டும்.

வாகனம் ஓட்டுதல்

குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவதற்கு பூஜ்ய சகிப்பு (Zero Tolerance)

சிறிதளவு மதுபானம் இருந்தாலும் சிறைத் தண்டனை உண்டு.

வேகமாக ஓட்டுதல், டெயில்-கேட்டிங், (Tailgating) கைபேசி பயன்படுத்துதல் சட்டவிரோதம்.

சீட் பெல்ட் அனைவருக்கும் கட்டாயம்

சாலையை குறுக்கு வழியில் கடப்பது சட்டவிரோம்.

உரிமம் இல்லாமல் காரில் மதுபானம் எடுத்துச் செல்லவது குற்றம்

தண்டனை :

விதிமீறல் செய்தால் ரூ.10லட்சம் வரை அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கபடவேண்டும்.

2) மதுபானம் (**Alcohol**) விற்பனை – செய்ய வேண்டியவை **&** செய்யக்கூடாதவை (**Do's & Don'ts**)

உரிமம் கட்டாயம் (**Licensing Mandatory**) மதுபானத்தை விற்பனை, விநியோகம் அல்லது பரிமாற சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளிடமிருந்து உரிய உரிமம் கட்டாயம்

தண்டனை :

விதிமீறல் செய்தால் ரூ.10லட்சம் வரை அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கபடவேண்டும்.

அனுமதி விண்ணப்பம் (**Permit Application**)

விரிவான விண்ணப்ப நடைமுறையில் உள்ளது

இதில் அடங்கும் :

இடத்தின் வரைபடம் (Floor Plans)

நில உரிமையாளர் ஒப்புதல்

உரிய கட்டணங்கள்

மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கவனத்திற்கு வராமல் இருக்க,

மதுபானக் கடைகள் மூடப்பட்ட கட்டிடங்களுக்குள் மட்டுமே இயங்க வேண்டும். திறந்த விற்பனை மற்றும் விளம்பரங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது பொது பாதுகாப்பு மற்றும் கலாச்சார மரியாதை உறுதி செய்வதற்காக

தண்டனை :

விதிமீறல் செய்தால் ரூ.10லட்சம் வரை அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கபடவேண்டும்

# செய்ய வேண்டியவை & செய்யக்கூடாதவை (Do's & Don'ts)
# 15 வாழ்க்கையை காப்பாற்றும் விதிகள்

தயாரிப்பு தரநிலைகள் (**Product Standards**)
விநியோகஸ்தர்கள்
Quality and Conformity Council (QCC) போன்ற அமைப்புகள் வகுத்துள்ள தரம் மற்றும் லேபிள் விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்.
தண்டனை :
விதிமீறல் செய்தால் ரூ.10லட்சம் வரை அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கபடவேண்டும்

தடை செய்யப்பட்ட செயல்கள் (**Prohibited Activities**)
உரிமம் இல்லாமல் மதுபானம் விற்பனை செய்தல்
மதுபான விளம்பரம் செய்தல் தடை
தண்டனை :
விதிமீறல் செய்தால் ரூ.10லட்சம் வரை அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கபடவேண்டும்

பதிவேடு பராமரிப்பு (**Record Keeping**)
உரிமம் பெற்றவர்கள்
மதுபான கையிருப்பு
அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்களிடமிருந்து வாங்கிய பதிவுகள் அனைத்தையும் துல்லியமாக பராமரிக்க வேண்டும்.
தண்டனை :
விதிமீறல் செய்தால் ரூ.10லட்சம் வரை அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கபடவேண்டும்

3) உடை அணிவது (**Dress Code**)
பொது இடங்களில் (மால்கள், பூங்காக்கள், உணவகங்கள்) மரியாதைக்குரிய உடை அணிய வேண்டும்.
வெளிப்படையான, அநாகரிகமான உடைகள், அவமதிக்கும் படங்கள் / வார்த்தைகள் உள்ள உடைகளுக்கு தடை.
பச்சை குத்தல்கள் (Tattoos) அவமதிப்பாக கருதப்படுமானால், மறைத்துக் கொள்ள வேண்டும்.
நிர்வாணம் அல்லது மேல் ஆடை இல்லாத சூரியக் குளியல் கடுமையாகத் தடை விதிக்கபடவேண்டும்
நீச்சல் உடைகள் கடற்கரை, நீச்சல் குளம், வாட்டர் பார்க் பகுதிகளில் மட்டுமே.
ஆண்கள் மார்பை வெளிப்படுத்தி மால்களில் நடக்கக் கூடாது.
பெண்கள் தோள்கள், முழங்கால்கள் மூடப்பட்ட உடை அணிவது சிறந்தது.
தண்டனை :
விதிமீறல் செய்தால் ரூ.10லட்சம் வரை அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கபடவேண்டும்

4) போதைப் பொருட்கள் (**Drug**)
எந்த அளவிலும் போதைப் பொருட்களுக்கு முற்றிலும் தடைசெய்யடபட்டுள்ளது.
குறைந்த பட்சம் 4 ஆண்டுகள் சிறை + நாடு கடத்தல் **என தண்டனை நிச்சயம்.**
சில மருந்துகள் (Codeine போன்றவை) தடை செய்யப்பட்டவை
தண்டனை :
விதி மீறல் செய்தால் ரூ. 10லட்சம் வரை அபராதம் அல்லது சிறைத் தண்டனை.

5) வெளிநாட்டினர் சமூக வாழ்க்கை
பல்வேறு நாடுகளை சேர்ந்த மக்கள் இங்கே வாழ்கிறார்கள்.
பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் கருத்துக்களை மதிக்க வேண்டும்.

# செய்ய வேண்டியவை & செய்யக்கூடாதவை (Do's & Don'ts)
# 15 வாழ்க்கையை காப்பாற்றும் விதிகள்

6) பொது அன்பு வெளிப்பாடு
திருமணமானவர்கள் கைகளைப் பிடித்தல் அனுமதி
முத்தம் பொது இடங்களில் குற்றம்
தண்டனை :
விதிமீறல் செய்தால் சிறைத் தண்டனை விதிக்கபடவேண்டும்

7) மருந்துகள்
மருத்துவர் எழுதிய கடிதம் அவசியம்
மருந்தின் காலம், நோய், மருந்தின் விவரம் தெளிவாக இருக்க வேண்டும்.
தண்டனை :
மருந்து சீட்டு இல்லாமல் மருந்து கொடுத்தால் அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கபடவேண்டும்

8) தனிப்பட்ட பாதுகாப்பு
அடையாள ஆவணங்களை எப்போதும் வைத்திருங்கள்
கார்களை பூட்டி வைத்துக் கொள்ளுங்கள்.

9) புகைப்படம்
அரசு கட்டிடங்கள், பாலங்கள், பெண்களை அனுமதியின்றி புகைப்படம் எடுப்பதற்கு தடை.
பிறரை அனுமதியின்றி புகைப்படும் எடுக்க கூடாது.
தண்டனை :
விதிமீறல் செய்தால் ரூ.10லட்சம் வரை அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கபடவேண்டும்

10) ஆபாசம்
இணையதளங்களில் ஆபாச படங்கள், வீடியோக்கம், இணையதளங்களில் முற்றிலும் தடை செய்ய வேண்டும்.
தண்டனை :
விதிமீறில் செய்தால் ரூ.10லட்சம் வரை அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

11) மதம் மற்றும் மரியாதை
சமூக ஊடங்களில் அல்லது பொதுவிடங்களில் சாதி தொடர்புடைய வார்த்தைகள் அனுமதிக்க கூடாது.
யாராவது அத்தகைய வார்த்தைகள் பேசினால், வேண்டாத பிரச்சனை உண்டாகும். அது மற்றவர்களின் மனதை புண்படுத்தலாம் அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.
தண்டனை :
விதிமீறில் செய்தால் ரூ.10லட்சம் வரை அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கபடவேண்டும்

12) பாலியல் நடத்தை
திருமணம் இல்லாத உறவுகள் சட்டவிரோதம்
பாலியல் தொல்லை கடுமையான குற்றம்
தண்டனை :
விதிமீறில் செய்தால் ரூ.10லட்சம் வரை அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்பட வேண்டும்.

13) புகைப்பிடித்தல் / வேப்
அரசு அலுவலகங்கள், மால்களில் புகைப்பிடித்தல் தடை
E-Cigarettes மற்றும் Vaping தடை விமான நிலையதில் பறிமுதல செய்யபடலாம்.
தண்டனை :
விதிமீறில் செய்தால் ரூ.10லட்சம் வரை அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது

# செய்ய வேண்டியவை & செய்யக்கூடாதவை (Do's & Don'ts)
# 15 வாழ்க்கையை காப்பாற்றும் விதிகள்

14) சமூக ஊடக சட்டங்கள்
அனுமதி இல்லாமல் புகைப்படம் பதிவிடுவது குற்றம்
அவதூறு, தனியுரிமை மீறல், மத அவமதிப்பு கடுமையான தண்டனைக்கு உட்படும்.
Whatsapp, Facebook பதிவுகள் நீதிமன்றத்தில் சாட்சியாக பயன்படுத்தப்படலாம்.
தண்டனை :
விதிமீறில் செய்தால் ரூ.10லட்சம் வரை அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கபடவேண்டும்

15) வேலை
வெளிநாட்டவர்கள் வேலை செய்வதற்கு சரியான வேலை விசா கட்டாயம் இல்லாவிட்டால், அது சட்டவிரோம் ஆகும்.
தண்டனை :
விதிமீறில் செய்தால் ரூ.10லட்சம் வரை அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கபடவேண்டும்





உலக பொதுமக்கள் ஒன்றிணைந்த சமூக சேவை சங்கம்

# உலக மக்கள் ஒன்றிணைந்த சமூக சேவை சங்கத்தின் பயணத்தில் சில கோரிக்கைகள்

கல்வி உதவிகள்: நூற்றுக்கணக்கான குழந்தைகளின் கனவு மீண்டும் தொடர்ந்தது.
மருத்துவ உதவிகள்: உயிர் காக்கும் அவசர நடவடிக்கைகள்.

வீடுகள்: பாதுகாப்பற்ற குடிசைகளில் இருந்து பல குடும்பங்கள் உறுதியான இல்லங்களுக்கு மாற்றப்பட்டனர். நாங்கள் செய்த ஒவ்வொரு உதவியும், மனதை நெகிழச்செய்த நன்றி முகங்கள். இதுவே நமது அடையாளம்.

## நமது மனிதநேயம் தொடர்கிறது

NPS தமிழ் சேனல், வெளிநாடு வாழ் தமிழர்கள் நலச் சங்கம், உதவும் கைகள், மற்றும் உலக மக்கள் ஒன்றிணைந்த சமூக சேவை சங்கம் எல்லாம் உங்களைப் போன்றவர்கள் இணைந்து நடத்திய சாதனைகள். இப்போது, இந்த பயணத்தில் நீங்களும் பங்கெடுக்கலாம். இங்கே தலைவர்கள் இல்லை; நாமே தலைவர்கள். உதவி தேவைப்பட்டால் எங்களை தொடர்பு கொள்ளவும். இணையுங்கள், நம்பிக்கையின் இயக்கத்தில்.

**உங்கள் ஆதரவின்றி இந்த சேவை சாத்தியமில்லை**





# அரசியல் தலைவர்களுக்கு ஒரு வேண்டுகோள்

நீங்கள் தவறு செய்யவில்லை; இந்த மக்கள் தான் தவறு செய்தார்கள். பணம் வாங்கியும், ஜாதியை அடிப்படையாகக் கொண்டும் வாக்களித்து உங்களை இந்த நிலைக்கு கொண்டு வந்து இருக்கிறார்கள்.

அதே மக்களிடையே நல்ல தலைவர்களும் இருக்கிறார்கள் என்பதையும் மறக்க வேண்டாம். வரும் தேர்தலில், ஆட்சி அமைத்தவராக இருந்தாலும் தோல்வியடைந்தவராக இருந்தாலும், நீங்கள் இதுவரை சம்பாதித்த வருமானத்துடன் திருப்தி கொள்ளுங்கள்.
ஏனெனில், நீங்கள் சம்பாதித்த பணமே தேர்தல் செலவுகளுக்கும், நீதிமன்ற வழக்குகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

இனிமேலாவது, உங்கள் சண்டைகளை விட்டுவிட்டு, மக்களை முன்னேற்றவும், நாட்டை முன்னேற்றவும், நாட்டின் கடன்களை அடைப்பதையும் உங்கள் கடமையாகக் கொண்டு உழையுங்கள்.

